# தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.2,547 கோடி செலவில் 8 துறைகள் ஒருங்கிணைந்து செயலாக்கப்படும் திட்டம் நீர்வள நிலவளத்திட்டமாகும். குறைந்த நீரில் அதிக மகசூல் என்ற நோக்குடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் அடங்கிய துறைகள் நீர் ஆதாரம், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண்மை விற்பனை, கால்நடை மற்றும் மீன்வளத் துறைகள் ஆகியன. நாளுக்கு நாள் நீர் வரத்து குறைந்துக் கொண்டு வருகிறது. இக்காலகட்டத்தில் குறைந்த நீரில் வேளாண்மை செயல்படுத்தபட வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதியுதவியுடன் இத்திட்டத்தை செயலாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் நோக்கங்கள் பாசன சங்கங்கள் அமைத்து பாசனதாரர்கள் பங்கேற்பு மூலமாக நீர் பாசன முறையை மேம்படுத்துதல் மற்றும் நவீன நீர் சேமிப்பு பாசன தொழில்நுட்பங்கள் பயன்படுத்துதல் ஆகியவன. மேலும் வேளாண்மையை தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்றுப் பயிர் சாகுபடி செய்தலும், நீர் பயனீட்டாளர்கள் சங்கம் அமைத்தலும் மற்றும் நீர் மேலாண்மையில் விவசாயிகளை ஈடுப்படுத்துதலும் இத்திட்டத்தின் இதர நோக்கங்களாகும்.

<u>இத்திட்டத்தில் பங்கேற்கும் துறைகள்</u>

<u>நீர்வள ஆதாரத்துறை:</u>

நீர்வள ஆதார அமைப்பின் பங்கு, நீர் பாசனதாரர் சங்கம் அமைப்பதிலும் பங்கேற்றலிலும் உள்ளது. இது மட்டுமின்றி கால்வாய்களை தூர்வாரி புனரமைக்கும் பணிகளிலும் ஏரி மற்றும் கால்வாய்களுக்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணிகளிலும் நீர்வள ஆதாரத்துறை பங்கேற்கின்றது பாசன அமைப்புகளை நீர்வள ஆதாரத்துறை நவினப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது.

<u>வேளாண்மைத் துறை:</u>

வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்களை புகுத்தியும், பாசன பரப்பை அதிகரித்தும் மற்றும் லாபகரமான மாற்றுப் பயிர்களை சாகுபடி செய்ய ஊக்குவித்தும்,

உற்பத்தித்திறனை அதிகரிக்க செய்து, உழவர்பெருமக்களின் வருவாயையும், வாழ்க்கை தரத்தையும் உயர்த்துவதே, வேளாண் துறையை பொருத்தமட்டில் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதிக பாசன நீர் தேவையும், அதிக வயதும், குறைந்த வருவாயும் கொடுக்கும் நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கு மாற்றுப் பயிராக குறைந்த நீர் தேவைப்படும், குறுகிய கால பயிர்களான மக்காச்சோளம், பயறுவகைகள், நிலக்கடலை போன்றவைகளை சாகுபடி செய்ய இத்திட்டத்தில் ஊக்குவிக்கப்படுகின்றன.

உபவடி பகுதிகளில், நீர்பாயாத நிலங்களில் (gap area) நீர்வள ஆதார துறையால் அளிக்கப்படும் கூடுதல் பாசன நீரைக்கொண்டு, பாசனப்பயிர் சாகுபடியை இத்திட்டத்தின் மூலம், வேளாண் துறை புகுத்தி வருகிறது. இதைத்தான் Gap area coverage with irrigated crop என்று சொல்கிறோம்.

வேளாண் துறையை பொருத்தமட்டில் இத்திட்டத்தின் செயல்பாடுகளில் முக்கியமானது. பெருவிளக்கத்தளைகள் அமைத்தல். குறைந்தது 5 ஹெக்டேர், 10 ஹெக்டேர் பரப்புகளில், தேவைப்படும் பல்வேறு பாசனப்பயிர்களுக்காக, குறிப்பாக diversification சம்பந்தப்பட்ட மக்காச்சோளம், பயறு வகைகள், நிலக்கடலை போன்ற அதிக லாபம் தரும் பயிர் சாகுபடி பெருவிளக்கத்தளைகள் அமைத்து, இவற்றில் அனைத்து நவீன தொழில்நுட்பங்களையும் கடைபிடித்து, உழவர் பெருமக்களுக்கு நேரில் காண்பித்து விளக்கப்படுகிறது. இந்த விளக்கத்தளைகளுக்கு தேவையான விலை உட்பட்ட அனைத்து இடுபொருட்களும் இலவசமாக அதாவது முழு மானியத்தில் இந்த ஆண்டு (2008–09) வழங்கப்படுகிறது. செம்மை நெல் சாகுபடி விளக்கத்தளை அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ.6000/– மதிப்புள்ள தேவையான இடுபொருட்களும், ரூ.1750/– மதிப்புள்ள கோனோ வீடர் என்று அழைக்கப்படும் களை எடுக்கும் கருவியும், மார்க்கர் என்று கூறுப்படும், நடவு இடைவெளி கடைபிடிக்க உதவும் கருவியும் வழங்கப்படுகிறது. இதை போல் மக்காச்சோளம் பெருவிளக்கப் பண்ணை அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ.4000/– மதிப்புள்ள இடுபொருட்களும், நிலக்கடலை பெருவிளக்கப் பண்ணை அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ.4000/– மதிப்புள்ள இடுபொருட்களும், ராகி பெருவிளக்கப் பண்ணை

அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ.2500/– மதிப்புள்ள இடுபொருட்களுக்கும் முழு மானியத்தில் உழவர்களுக்கு இத்திட்டத்தில் (2008–09) வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது.

பெருவிளக்கத்தளைகள் அமைக்கும் போது, வயல் தயார் செய்வது முதல் அறுவடை வரை ஒவ்வொரு செயல்பாட்டிலும், அப்பகுதி உழவர்பெருமக்களை அழைத்து விளக்கம் அளிக்கப்படுகிறது. தொழில்நுட்பங்களில் அவசியம், பயன் பற்றி விளக்கப்படுகிறது. எனவே இந்த தொழில்நுட்பங்களையும், செயல்பாடுகளையும் அவர்கள் தங்கள் வயல்களில் அரசு உதவி எதிர்பாராமல் தாங்களாகவே கடைபிடித்து நல்மகசூல் பெற வழிவகுக்கப்படுகிறது. இதைத் தான் ஈர்ப்புப் பகுதி வயல்கள் அதாவது impact area என்று கூறுகிறோம். இந்த ஈர்ப்புப் பகுதி விவசாயிகளுக்கு தேவையான அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளும், வேளாண் விரிவாக்க பணியாளர்கள் வழங்கப்படுகிறது. இந்த தொழில்நுட்பங்கள் கடைபிடிக்க தேவையான அனைத்து இடுபொருட்களும், அப்பகுதி வேளாண் விரிவாக்க மையங்களில் வைக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் அமைக்கப்படும் அனைத்து விளக்கத்தளைகளுக்கும், மண்பரிசோதனை பரிந்துறைத்தப்படி உரமளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில், உழவர் பெருமக்கள் நவீன வேளாண் சாகுபடி தொழில்நுட்பங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில் வேளாண் தகவல், விளம்பரம் மற்றும் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு செயலாக்கப்படுகிறது. நவீன தகவல் மற்றும் விளம்பர உத்திகள் இத்திட்டத்தில் கையாளப்படுகிறது. குறிப்பாக சுவர் விளம்பரம், பேனர், விளம்பரம் பயன்கள், அச்சு தார்கள் மூலம் தக்க பருவத்தில் தேவையான விளம்பரம் செய்து உழவர் பெருமக்கள் தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்படுகிறது. வயல் விழாக்களில் குறிப்பாக அறுவடை விழாக்கள் நடத்தி, சாதனை காரணிகளை உழவர்களுக்கு விளக்கி ஊக்குவிக்கப்படுகிறது.

<u>தோட்டக்கலைத் துறை:</u>

பயிர்களில் சந்தை வாய்புள்ளவைகளைக் கண்டறிந்து அவைகளை உற்பத்தி செய்தல் மற்றும் அதிக லாபம் அடைய அதிக மகசூல் கிடைக்கும் பயிர்களைப் பயிரிடுதல்

தோட்டக் கலைத்துறையின் முக்கிய பணியாகும், அதிக உற்பத்தித்திறன் பெற சரியான மற்றும் அதிக எண்ணிக்கை நடவினைக் கடைப்பிடித்தலும் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மற்றம் ஒருங்கிணைந்த பூச்சி நோய் தடுப்பு நீர்வளம் மூலம் மண் வளத்தை பாதுகாத்தலும் தோட்டக்கலைத்துறை ஈடுபடுகின்றது. வாழை, வீரிய தக்காளி, வெண்டை, கத்திரி பாகல், வெங்காயம் மற்றும் மரவள்ளி ஆகிய பயிரிடப்படும் பரப்பு அதிகரிக்க செய்தல் மற்றும் விதைகள் கன்றுகள் உயிர் உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளை மானிய விலையில் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்தலும், விவசாயிகள் தொழில் நுட்பங்களை அறிய பயிற்சி மற்றும் கல்விச் சுற்றுலா அழைத்து செல்லுதல் இத்துறையின் செயல்பாடுகளாகும்.

<u>வேளாண்மை பொறியல் துறை:</u>

வேளாண்மைப் பொறியியல் துறை பாசன நீர் உபயோகத்திறனை மேம்படுத்திட, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்பாசன முறைகளை பரவலாக்குவதில் ஈடுபட்டுள்ளது. கூடுதல் வருமானம் மற்றும் தரமான உற்பத்திக்கு, அளவான நீரைப் பயன்படுத்துவதே சிறந்த வழி என்ற அடிப்படையில் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் வடிவமைக்கப்பட்டு வரவலாக்கப்படுகின்றன. விவசாயப் பணிகளை இயந்திரமயமாக்கு வதற்கு வேளாண்கருவிகள் பரிந்துரைத்தலும் மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைத்து, கூடுதல் வருமானம் பெற மீன் வளர்ப்பினை ஊக்குவித்தலிலும் ஈடுபட்டுள்ளது.

**<u>தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்</u>**

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வள நிலவளத் திட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் ஏனைய துறைகளுடன் ஒருங்கிணைந்து விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த ஒரு துறையாக செயல்பட்டு வருகின்றது. நீர்வள நிலவளத் திட்டத்தின் மூலம் தமிழகத்திலுள்ள நீர்வள ஆதார அமைப்பினை புனரமைத்து நிலத்தடி நீரினை வளம்பெற செய்தலே இத்திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். இத்திட்டத்தின்மூலம் நீரினை சேமிப்பதும் வேளாண்மையில் சிக்கன நீர் உபயோகிக்கும் முறையை கையாள்வதும் திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். தற்சமயம் வேளாண்மையில் நெல் சாகுபடிக்கு அதிக நீர்த்தேவை உள்ளதால் அதற்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செம்மை நெல் சாகுபடி இத்திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 38 விழுக்காடு நீர்தேவை சாதாரண நடைமுறையிலுள்ள நெல் சாகுபடியினை விட குறைவாக

உபயோகப்படுத்தப்படுகிறது. மேலும், குறைந்த அளவு நீரினை உபயோகித்து அதிக வருவாய் பெறும் வகையில் துல்லிய வேளாண்முறை தோட்டக்கலை பயிர்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அதிக விளைச்சல் தரக்கூடிய வீரிய ஒட்டு ரகங்களையும், உயர் சாகுபடி தொழில் நுணுக்கங்களையும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

<u>வேளாண்மை விற்பனைத்துறை</u>

தமிழக வேளாண் விற்பனையின் முக்கிய அம்சங்களாக சந்தை உபரி மற்றும் குறைவே அடிக்கடி நிலவும் நிகழ்வுகளாக உள்ளது. பெரும் பாலான வேளாண் மக்களுக்கு சந்தை நிலவரங்கள் தெரிவதில்லை, பொருட்களின் தரம் பற்றி விழிப்புணர்வு ஏதுமில்லை. இதனால் தரமான பொருட்களுக்குரிய லாபகரமான சந்தை விலையை அவர்கள் அடைவதில்லை. எனவே இத்திட்டத்தின்கீழ், வேளாண் மக்களின் சந்தை உணர்வை ஒருமுகப்படுத்த, பாசன நீர் உபயோகப்படுத்துவோர் சங்கங்கள் மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சந்தை நிலவரம் மற்றும் நுண்ணறிவு சம்பந்தப்பட்ட முயற்சிகள் மூலமாக, குறிப்பிட்ட அலகு நீருக்கான அதிக லாபம் தரக்கூடிய பயிர்கள் மற்றும் சந்தையில் அதிக அளவு தேவைப்படும் விளைப்பொருட்களை கண்டறிந்து அவற்றை விளைவிக்க ஏதுவாகும். மாற்றுப் பயிர்திட்ட பகுதியாக மக்காச்சோளம், நிலக்கடலை, காய்கறிகள், வாழை, மிளகாய் ஆகிய பயிர்களை சார்ந்த வேளாண் தொழில்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்படும். பாசன நீர் உபயோகப்படுத்துவோர் சங்கங்களுக்கு கணினி வலைதள வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதன் மூலம் சந்தை நிலவரம், தொழில்நுட்ப அறிவு ஆகியவை பெறப்படும்.

சந்தை தகவல் மற்றும் நுண்ணறிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தக்க பயிர் முறை, வேளாண் விற்பனை ஆகியவற்றை சுயநிர்ணயம் செய்து கொள்ள தக்க வாய்ப்பளிக்கப்படும். பாசன நீர் உபயோகப்படுத்துவோர் சங்கங்களின் தேவைக்கேற்ப சேகரிப்பு மையங்கள், சேமிப்பு கிட்டங்கிகள், உலர்களங்கள், தரம் அறியும் கருவிகள், தகவல் பரிமாற்ற மையங்கள் மற்றும் தரத்தினை மேம்படுத்தும் கருவிகள் ஆகியவற்றை பெற திட்டத்தின் மூலம் உதவி செய்யப்படும்.

**<u>கால்நடை துறை</u>**

கால்நடை துறை மேற்கொள்ள உள்ள செயல்பாடுகள் பின்வருமாறு;

- வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளின் சேவைகளைப் பயன்படுத்தி, சேவையில்லா பகுதிகளின் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவ சேவை மற்றும் இனப்பெருக்க உதவி, உப வடிநில கால்நடை மருத்துவ பிரிவுகள் ஏற்படுத்தி வழங்குதல்.
- கால்நடை நிலையங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தி, தரமான கால்நடை மருத்துவ சேவை மற்றும் நோய் ஆய்வை வழங்குதல்.
- செயற்கைமுறை கருவூட்டலுக்கு அதிக பலன் தரக்கூடிய உறைவிந்து குச்சிகளை பயன்படுத்துதல்.
- கூடுதல் பகுதிகறை பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டு வந்து, பசுந்தீவனம் கிடைப்பதை அதிகரித்தல்.
- மலடு நீக்கம் மற்றும் முழுமையான கால்நடை மருத்துவ சேவை முகாம்கள் மற்றும் தாதுக் கலவை வழங்குவதின் வாயிலாக முழுமையான கால்நடை மருத்துவ சேவையை உறுதிபடுத்துவது மற்றும் சினை பிடிப்பு சதவீதத்தினை அதிகரித்தல்.
- பல்வேறு தகவல், படிப்பு மற்றும் தகவல் தொடர்பு பிரச்சாரங்கள் மற்றும் பயிற்சிகள் வாயிலாக விவசாயிகளுக்கு சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் / தொழில் நுட்பம் பற்றிய அறிவாற்றலை மேம்படுத்துதல்.

**<u>மீன்வளத் துறை</u>**

இத்துறை விவசாயிகளின் பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்க்க தொழில்நுட்பங்களையும், பயிற்சியையும் வழங்கி கூடுதல் வருமானம் பெற ஊக்குவிக்கிறது. உபவடி நிலங்களிலேயே தரமான மீன்விதைகள் மீன்வளர்ப்போருக்கு கிடைக்க ஏதுவாக நீர்ப்பாசன சங்கங்களை ஊக்குவிக்கிறது. வண்ண மீன்வளர்ப்பு மூலம் கிராமப்புற மக்களின் வருமானத்தையும், வேலைவாய்ப்பினையும் பெருக்க ஆவண செய்கிறது. மேலும் சுகாதாரமான மீன்விற்பனை செயல்விளக்கங்களினால், நுகர்வோரை ஏதுமான மீன் உணவு கிடைக்கவும், உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் ஆவண செய்கிறது. உபவடி நிலங்களிலுள்ள நீர்நிலைகளில் மீன்பிடி திறனை அதிகரிக்க நவீன மீன்படி உபகரணங்களை வழங்குகிறது.

முடிவுரை

இத்திட்டம் **6** ஆண்டுகளில் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப் படுகின்றது. நீர்வள நிலவளத்திட்டம் இத்திட்டத்தை **63** துணைவடி நிலங்களில் செயலாக்க ரூ.**2,547** கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த மேற்குறிப்பிட்ட **8** துறைகளை மாநில அளவில் ஒருங்கிணைத்து, வழி நடத்தி ஆலோசனை வழங்க சென்னையில் பல்முனைதிட்டப்பிரிவு என்ற அமைப்பு செயல்படுகின்றது. இதில் மேற்சொன்ன அனைத்து துறைகளிலும் அங்கம் வகிக்கும் அலுவலர்கள் மற்றும் நிபுணர்களும் இத்துறையில் செயல்படுகின்றனர்.